Sri MANAKULA VINAYAGAR
Medical college and Hospital
*Kalitheerthalkuppam, Madagadipet, Puducherry- 605107*

MANA - KURAL
*The official podcast of SMVMCH*

**Name of Resource person: Dr. Shanthi M**

**Podcast Title:** **காலாவதியான மருந்துகள் பற்றிய விழிப்புணர்வு.**

**Department:**
**Pharmacology (Pharmacovigilance committee)**

**Category: (Select relevant category)**
**Public awareness**

**TRANSCRIPT**

அனைவருக்கும் வணக்கம்! நான் மா. சாந்தி, பேராசிரியர், மருந்தியல் துறை, இன்று நான் "**காலாவதியான மருந்துகள் பற்றிய விழிப்புணர்வு**" என்ற தலைப்பில் பேசப் போகிறேன்.

**காலாவதியான மருந்துகள் பற்றிய விழிப்புணர்வு.**

மருந்து மாத்திரைகளை காலாவதியான பிறகு பயன் படுத்துவது நல்லதல்ல. எல்லா மருந்துகளுக்கும் காலாவதி தேதி உண்டு. எப்படி உணவு வகைகளுக்கு உண்டோ அதே மாதிரிதான்.

**காலாவதி தேதிக்குப் பிறகு மருந்துகளின் நிலைப்பாடு என்ன ?**

ஒவ்வொரு மருந்திலும் ஒவ்வொரு விதமான வேதிப்பொருள் இருக்கும் (அதாவது active ingredient) எல்லா வேதிப்பொருட்களும் ஒரு காலகட்டத்தில் வேதியல் மாற்றமடையும் (chemical change) அதைக் கணக்கில் கொண்டுதான் காலாவதி நாளைக் குறிப்பிடுகிறார்கள். காலாவதி தேதி முடிந்தவுடன் வேதிப்பொருளின் அளவு 50% ஆக குறையலாம். அப்படிக் குறைந்தால் கூட பரவாயில்லை. ஆனால் பல பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

## காலாவதியான மருந்துகளை உட்கொண்டால் என்ன ஆகும்.

பலரும் நினைப்பது போல் நாள் கடந்த மாத்திரைகளை உட்கொள்ளுவதால் அது விஷமாவதில்லை! உயிரையும் மாய்ப்பதில்லை. அப்படியென்றால் என்ன நேரலாம்.

மருந்தின் செயல்படும் திறன் குறைந்து போகும். உதாரணத்திற்கு ஒருவர் வலிப்பு வராமல் இருக்கும் மருந்துகளை உட்கொண்டால் அவை செயல் இழப்பதால் நோயாளிக்கு வலிப்பு ஏற்படலாம், அல்லது அதற்கான சாத்தியம் அதிகரிக்கலாம்.

உடல் பாதிக்கப்படலாம், உதாரணத்திற்கு - காலாவதியான டெட்ராசைக்ளின் மருந்தின் பல்வேறு இரசாயன மாற்றங்கள் ஏற்படுவதால் அது சிறுநீரகத்தை பாதித்துவிடும்.

நாட்பட்ட நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளை (antibiotic) பயன்படுத்தும் போது, அவற்றின் செயல்பாடு குறைந்துவிடுவதால் பின்னாளில் இதே மருந்துகளுக்கு நுண்ணுயிர்கள் அதாவது bacteria எளிதில் அழிவதில்லை. அந்த மருந்துகளுக்கு எதிரான எதிர்ப்புத் திறனை பெற்று விடும். இதைத்தான் antibiotic resistance என்போம். அதாவது வருங்காலத்தில் பயனில்லாமல் போய்விடும் (treatment failure).

## நாம் செய்ய வேண்டியது என்ன ?

மருந்துக்கடைக்குச் சென்று மருந்துகள் வாங்கும் பொழுது காலாவதியாகும் தேதியை மறக்காமல் சரிபார்த்து வாங்க வேண்டும்.

மருந்துகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். பெரும்பாலானவற்றை வெளியில் வைத்திருந்தாலும் வெப்பம் தாக்காமலும், ஈரப்பதம் படாமலும் பாதுகாப்பது நல்லது.

காலாவதியான மருந்துகளை சேகரித்து அப்புறப்படுத்த வேண்டும் அல்லது அழிக்க வேண்டும். அதாவது வாங்கிய மருந்துக்கடைகளில் கொடுத்து விடலாம், அல்லது

பிளாஸ்டிக் பைகளில் போட்டு general trash ல் போடலாம்.

**நோய்களின் மருந்தே, நோயை உண்டாக்காமல் தடுத்துக் கொள்ள வேண்டும்.**

23/04/24
Signature of the Resource Person
Professor & Head
Pharmacology Department
SMVMCH, Kalitheerthalkuppam
Puducherry

Signature of the HOD
Professor & Head
Pharmacology Department
SMVMCH, Kalitheerthalkuppam
Puducherry